Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 038 | வெள்ளிக்கிழமை Friday | 08.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ‘ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மையை த.வெ.க. நிரூபிக்கவில்லை’ கவர்னர் மாளிகை விளக்கம்



சென்னை:தமிழகத்தில் ஆட்சியமைக்க அழைக்குமாறு கோரிய தவெக தலைவர் விஜய்யிடம், பெரும்பான்மைபலம்வேண்டும் என்று ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விளக்கம் அளித்துள்ளார்.


நடந்து முடிந்த 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் தவெக 108 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவைப்படும் நிலையில், தவெகவுக்கு காங்கிரஸ் (5 தொகுதிகள்) ஆதரவு தெரிவித்துள்ளது.

6 தொகுதிகள் தேவைப்படும் நிலையில், தவெக இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும்,விசிகவிற்கும் ஆதரவு கோரி கடிதம் எழுதியுள்ளது. இது குறித்து ஆலோசித்து முடிவு எடுப்பதாக அந்தந்த கட்சி தலைவர்கள் தெரிவித்திருக்கின்றனர். தவெக தலைவர் விஜய், நேற்றைய தினம் ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆளுநர் அர்லேகரை சந்தித்து, ஆட்சியமைக்க அழைப்பு விடுக்குமாறு நேரில் கடிதம் கொடுத்தார். ஆனாலும் ஆளுநர் எந்த அழைப்பும் விடவில்லை. ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு விசிக, இந்திய கம்யூனிஸ்ட், காங்கிரஸ் மற்றும் மநீம உள்ளிட்ட கட்சிகள் கண்டனம்தெரிவித்து வருகின்றன. , தவெக தலைவர்விஜய் இன்று காலைமீண்டும்கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் ஆளுநர் அர்லேகரை சந்தித்தார்.தனிப்பெரும்கட்சியாக இருப்பதால் ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என்றும், பெரும்பான்மையை சட்டமன்றத்தில் நிரூபிக்கிறோம் எனவும் ஆளுநரிடம் விஜய் கூறியதாக தெரிகிறது. ஆனால், ஆட்சியமைப்பது குறித்து விஜய் அளித்த விளக்கங்களில்ஆளுநருக்கு திருப்தியில்லை என தகவல் வெளியாகியது. 112 எம்எல்ஏக்களின் ஆதரவு இருக்கும் நிலையில், கூடுதலாக ஆதரவு தரப் போகும் 6 எம்எல்ஏக்கள் யார்? எனவும் ஆளுநர் கேள்வியெழுப்பியதாக தெரிகிறது. பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமா? ஆட்சியமைத்தால் கவிழாது என உறுதியளிக்க முடியுமா? என ஆளுநர் கேட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், இதுகுறித்து ஆளுநர் மாளிகை விடுத்துள்ள அறிக்கையில்,"தவெகதலைவர் சி. ஜோசப் விஜய்யைசந்திக்கஆளுநர் அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்று வந்த விஜய்யிடம், ஆட்சியமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை பலம் உங்களிடம் இல்லை என ஆளுநர் விளக்கம் அளித்தார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலையான அரசு.. மேலும், "பெரும்பான்மை பலம் இருப்பதை உறுதிப்படுத்திய பிறகே, ஆட்சி அமைக்க உரிமை கோரி அளித்த கடிதத்தை பரிசீலிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏனெனில், மாநிலத்தில் ஒரு நிலையான அரசு அமைய வேண்டும் என்பதையே ஆளுநர் விரும்புகிறார்.

பெரும்பான்மை பலம்உறுதிப்படுத்தப்பட்ட உடனேயே, விஜய் பதவியேற்கலாம்."

# புதுச்சேரி விடுதியில் தமிழக அதிமுக எம்எல்ஏக்கள் எடப்பாடி பழனிசாமி விரைவில் ஆலோசனை



புதுச்சேரி: தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்த போதிலும் ஆட்சியமைக்க முடியாமல் தவெக திணறிக் கொண்டிருக்கும் சூழலில்,அதிமுகஎம்எல்ஏக்கள் பலர்புதுச்சேரி ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு பிறகுதமிழகஅரசியல் களம் பெரும் பரபரப்பைசந்தித்து வருகிறது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், 108 தொகுதிகளை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது.

ஆனால், ஆட்சியமைக்க 118 எம்எல்ஏக்கள் தேவை என்பதால் தவெக தற்போது மற்ற கட்சிகளின் ஆதரவை நாடும் சூழல் ஏற்பட்டுள்ளது.இதில், திமுக கூட்டணியில் 5 தொகுதிகளை வைத்திருக்கும் காங்கிரஸ், தவெகவுக்கு ஆதரவு அளித்தது.

ஆனால், விசிக, இடதுசாரிகள் தவெகவுக்கு ஆதரவு கொடுக்காமல் இழுத்தடித்து வருகின்றன. இந்த சூழலில், பெரும்பான்மை இல்லாததை காரணம் காட்டி விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைக்கவில்லை.

இந்த களோபரங்களுக்கு மத்தியில்,அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரியில் உள்ள ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தகவல் வெளியாகியுள்ளது. விஜய் பெரிதும் நம்பியிருந்த விசிகவும்,இடதுசாரிகளும் ஆதரவு கொடுப்பதற்கு தயக்கம் காட்டுவதால், அதிமுகவுடன் தவெக பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் தான், புதுச்சேரியில் உள்ள தவளக்குப்பத்தில் இருக்கும் ஒரு நட்சத்திர விடுதியில் ஒரு தரப்பு அதிமுக எம்எல்ஏக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஓ.எஸ். மணியன், விஜயபாஸ்கர் உள்ளிட்ட சுமார் 27 அதிமுக எம்எல்ஏக்கள் அந்த ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தவெகவுக்கு அதிமுக எம்எல்ஏக்கள் யாரும் அணி மாறிவிடக் கூடாது என்பதால் இந்தஏற்பாட்டைஅதிமுக தலைமை செய்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


அதே நேரத்தில், தவெகவுக்கு ஆதரவு கொடுக்குமாறு எடப்பாடி பழனிசாமியை சி.வி.சண்முகம் கடந்த இரு தினங்களாக நிர்பந்தித்து வருவதாக ஒரு தகவல் பரவியது.

ஆனால், அதற்கு எடப்பாடி பழனிசாமி சம்மதிக்காததால், சி.வி. சண்முகம் தனு ஆதரவு எம்எல்ஏக்களுடன் நட்சத்திர விடுதியில் தங்கி இருப்பதாக மற்றொரு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், விடுதியில் அதிமுக எம்எல்ஏக்கள் தங்கியிருப்பது குறித்து புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர் அன்பழகனிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அவர், "சென்னையில் வெயில் அதிகமாக இருப்பதால், அவர்கள் புதுச்சேரியில் தங்கியுள்ளனர்" என கூறினார். மேலும், தவெகவுக்கு அதிமுக ஆதரவு அளிக்குமா? என்ற கேள்விக்கு, "அதை பற்றி நான் பதில் கூற முடியாது. ஆனால், ஆதரவு இல்லை என அதிகாரப்பூர்வமாக அதிமுகஅறிவித்துள்ளது.அதிமுகவில்எந்த பிளவும் இல்லை. எடப்பாடி பழனிசாமிக்கு தெரியாமல் நான் இங்கு வர முடியுமா?" என அன்பழகன் பதிலளித்தார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 19 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் கோவை, மதுரை, தஞ்சை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் (மே 8) கனமழைபெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சதீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 1.5 கிமீ உயரத்தில் நிலவுகிறது.

தெற்கு கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சதீவு பகுதிகளிலிருந்து தென்மேற்கு மத்திய பிரதேசம் வரை,உள் கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒருவளிமண்டலகாற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாகநாளை(மே9)முதல்



மே 13-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும்,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

8) நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர்,திருவாரூர்,நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி,மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

9, 10 தேதிகளில் மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் திருச்சி, நாமக்கல், கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

11-ம் தேதி ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை, டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 12, 13 தேதிகளில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், டெல்டா மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஓரிரு பகுதிகளில் இடி,மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் வெள்ளித்திருப்பூர் அருகே ஒலகடம் கிராமத்தில் உள்ள ராஜ ராஜேஸ்வரி சொக்கநாச்சியம்மன் கோவில் பொங்கல் மற்றும் குண்டம் திருவிழா நடைபெற்றது. நிகழ்வில் பொதுமக்கள் திரளான அளவில் கலந்து கொண்டு பொங்கல் வைத்தும் குண்டம் இறங்கியும் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றி வழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து மாவிளக்கு ஊர்வலம் நடைபெற்றது.

# நந்தா கல்வியியல் கல்லூரியில் சர்வதேச அளவிலான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை



நந்தா கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான ஒரு நாள் சர்வதேச அளவிலான பயிற்சிப்பட்டறைகல்லூரிவளாக க லை ய ர ங் கி ல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் ச.பானுமதி சண்முகன் குத்துவிள க்கேற்றி துவக்கி வைத்தார். ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைப்பெற்ற இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். பத்மா வரவேற்புரை வழங்கினார்.

சிறப்பு பயிற்சியாளர்களாகமலேசியாசன்வே பல்கலைக்கழகம்பேராசிரியர் முனைவர். சதீஸ்குமார் தரவு அறிவியல்மற்றும்செயற்கை நுண்ணறிவுத்துறையின் சோதனை ஒருங்கிணைப்பாளர் பொன். வெங்கடபிரசாத், ஜெர்மனியின் சீனியர் சோதனைப் பொறியாளர் ஜெனர் ஸ்ட்ராஸ் ரூ வொல்ப்ஸ்பர்க் மற்றும் கொங்கு பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல்துறை மூத்த பேராசிரியர் முனைவர். சி.எஸ். கனிமொழி செல்வி ஆகியோர் செயற்கை நுண்ணறி வின் மூலம் வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பித்தல் மற்றும் துணைக்கருவிகளை பயன்படுத்தி பாடம் நடத்தும் திறன்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார்கள்.

இப்பயிற்சிப்பட்டறையில் பல்வேறு மாநிலம் மற்றும் மாவட்டங்களிலிருந்து கல்லூரி முதல்வர்கள், துணைப்பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி மாணவர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தார்கள். விழா முடிவில் துணைப் பேராசிரியர் முனைவர் ஜெயக்குமார் அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் முதல்வர், நிர்வாகஅலுவலர், துணைப் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிலநுட்ப உதவியாளர்கள் அனைவருக்கும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி மற்றும் நிர்வாகஅலுவலர் முனைவர் வி.சி ஸ்ரீனிவாசன் ஆகியோர் தங்களது வாழ்த்தினைத் தெரிவித்தார்கள்.

# தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் மெயின்பஜாரில் கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து கனிம வளகனரக வாகனங்களால் போக்குவரத்து நெரில்சல்



தென்காசி மாவட்டம் வீ ர கே ர ள ம் பு தூ ர் மெயின்பஜாரில் கடந்த 3 ஆண்டுகளாக கனிம வளகனரக வாகனங்களால் போக்குவரத்து நெரில்சல். வீ.கே.புதூர் ஊருக்குள் மெயின்ரோட்டில் சுமார் 500 மீட்டரை கடந்து செல்ல சுமார் 30 நிமிடத்திற்கு மேலாக 1 1/2 கிலோமீட்டர் தூரம் அணிவகுத்து நிற்கும் வாகனங்களால் வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். தற்போது கன்னியாகுமரிமாவட்டத்தில் மார்த்தாண்டம் வழியாக கேரளா செல்லும் வாகனங்களை பல்வேறு போராட்டங்கள் நடந்ததால் அம்மாவட்ட நிர்வாகம் கனரக கனிமவளவாகனங்கள் செல்ல தடைசெய்தது. இதனால் அங்கு பெரும் விபத்து க்களும் போக்குவரத்து ரோடுகளும் சேதம்டைந்து குறைந்துள்ளது. இருந்தும் தென்காசி மாவட்டம் புளியரை வழியாக கனி மவளகரைக வாகனங்கள் ஏற்றிச்செல்ல எந்தவித கடுமையான கட்டுப்பாடுகளும் தடையும் இல்லாததாலும் தென்காசி பாவூர்சத்திரம் மேம்பால பணி நடைபெறுவதாலும் தூத்துக்குடி கன்னியாகுமரி தென்காசி மாவட்ட கனிம வளங்களை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள் வீ.கே.புதூர் சுரண்டை வழியாக செல்வதால் தினமும் போக்குவரத்து இடையூறு ஏற்படுவது மட்டுமல்லாது விபத்து க்களால் உயிர் இழப்பும் ரோடுகள் சேதமடைவதும் வாக சேதத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் அன்றாடம் நடைபெறுகிறது. இக்கனரக வாகனங்களால் போக்குவரத்தைசரிசெய்யவீ.கே. புதூர், சுரண்டை காவல்துறையினர் தினமும் படாதபாடுபட்டு நீண்டதூர வாகனங்களை ஒழுங்குபடுத்த முயன்று பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றறனர்

. இதனால் வாகன ஓட்டிகளுக்கிடையேயும் போலிசாருக்கும் இடையே தினமும் வாக்குவாதங்கள் நடந்துவருகிறது. ஆனால் போக்குவரத்து தொடர்ந்து தடைபட்டு தான் வருகிறது. இக்கனரகவாகங்களால் கேரளாவிற்கு செல்லும் வழி முழுவதும் கட்டிட இடிபாடுகளும் வாகன விபத்துக்களும் தொடர்ந்து நடந்துவருகிறது. இப்பிரச்சனை குறித்த தகவல்களை மாவட்ட நிர்வாகம் தடுத்து நிறுத்தி பொதுமக்களின் நலன் காக்க இப்பகுதி மக்கள் ஏக்கத்துடன் கனரகவாகனத்தையும் ரோட்டையும் விழிபிதுங்கி பார்க்கின்றனர்.



சென்னைஎழும்பூரில்அமைந்துள்ளமறுமலர்ச்சிதிராவிடமுன்னேற்றக்கழகத்தின்(மதிமுக)தலைமைஅலுவலகமான 'தாயகம்' அலுவலகத்தில், மதிமுக கட்சியின் பொதுச்செயலாளர் வைகோவை, ஈரோடு நாடளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மரியாதைநிமித்தமாக சந்தித்தார். இந்தநிகழ்வில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரைவைகோ மற்றும் மதிமுக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



ஈரோடுமாவட்டம், சிவகிரிபேரூராட்சிபொதுமக்கள்பயன்பெறும்வகையில்தனியார்நிறுவனத்தின்நிதிபங்களிப்பின் மூலம் புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO water plant) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனை சிவகிரி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கோபிநாத் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் சுருதி தலைமையில் வாராந்திர குற்ற தடுப்பு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

# நியூ பட்டாபிராம் வெட்ரன்ஸ் கால்பந்து சங்கம் சார்பில் 8ம் தேதி முதல் 10ம் தேதி வரி 3 நாட்கள் போட்டி

நியூ பட்டாபிராம் வெட்ரன்ஸ் கால்பந்து சங்கம் - பதிவு எண் : SRG25/2024* *நடத்தும்*

மூன்று நாட்கள் ( 08.05.2026, 09.05.2026, 10.05.2026 ) நாட்கள் நடைபெறும்

தென்னிந்திய வெட்ரன்ஸ் 11 பேர் கால்பந்து போட்டி - 2026

இடம் : ஆவடி கன்னப்பாளையம் நசரேத் அறிவியல் மற்றும் கலை கல்லூரியில் வளாகம்*

போட்டிகள் நடைபெறும் நேரம் : காலை 6.00 முதல் மதியம் வரை மூன்று போட்டிகள் மாலை 3.00 மணி முதல் மூன்று போட்டிகள் , ஞாயிறுக்கிழமை (10.05.2026 ) காலை இரண்டு போட்டிகள் மாலை இரண்டு போட்டிகள்தொடர்பிற்கு : முனைவர் து.ரமேஷ் :+91 63745 33601



# மதுரையில் பெய்த கனமழையில் அவனியாபுரம் மாநகராட்சி அலுவலகத்திற்குள் புகுத்த மழை நீரால் குளம்போல் மாறியது

மதுரை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பகலில் வெயில் வாட்டி நிலையில் இரவு நேரத்தில் மதுரை மாநகர், புறநகர் பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

நேற்று திருப்பரங்குன்றம், திருநகர், அவனியாபுரம் ஆகிய பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கனமழை பெய்தது.

இதனால் மழை நீர் சாலைகளில் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இந்த நிலையில் மதுரை அவனியாபுரம் மாநகராட்சி அலுவலகத்திற்குள் மழை நீர் சூழ்ந்துள்ளது.



இதனால் மாநகராட்சி ஊழியர்கள் பணிக்கு சென்று வருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்திருப்பதாகவும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் மூலமாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

# விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழக மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்: கமல்ஹாசன் பேச்சு



சென்னை: "விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்" என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

எனது சகோதரர் மு.க. ஸ்டாலின், மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன்.

இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.


விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும். 233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆக வேண்டும்' என தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்து தேர்தலை எதிர்கொண்ட தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. திமுக 59 இடங்களிலும், அதிமுக 47 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. காங்கிரஸ் கட்சி 5, பாமக 4, ஐயுஎம்எல் 2, சிபிஐ 2, சிபிஎம் 2, விசிக 2, பாஜக 1, தேமுதிக 1, அமமுக 1 ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் தோல்வி: புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் எம்பி வைத்திலிங்கம்



புதுச்சேரி: சட்டப்பேரவைத் தேர்தல் படுதோல்வியடைந்ததால் காங்கிரஸ் மாநிலத் தலைவர் பதவியை எம்பி வைத்திலிங்கம் ராஜினாமா செய்து கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுச்சேரியில் இண்டியா கூட்டணியில் காங்கிரஸ்- திமுக இடையே தலைமை யார் வகிப்பது என தொடங்கி தொடர் மோதலில் ஈடுபட்டது. காங்கிரஸ் நட்பு போட்டியில் ஈடுபட்டு 22 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியில் மட்டுமே வென்று படுதோல்வி அடைந்தது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் வைத்திலிங்கம் எம்பி, தட்டாஞ்சாவடி தொகுதியில் ரங்கசாமியை எதிர்த்துப் போட்டியிட்டார். அவர் நான்காம் இடத்தை பிடித்து டெபாசிட் கூட வாங்கவில்லை. இதையடுத்து கட்சியிலும் வைத்திலிங்கத்துக்கு எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து வைத்திலிங்கம் காங்கிரஸ் கட்சி தலைவர் பதவியை வகிக்கக் கூடாது. விலக வேண்டும் என்று கூறி காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்விக்கு தார்மிக பொறுப்பு ஏற்று தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக ராகுல் காந்திக்கு வைத்திலிங்கம் எம்பி கடிதம் எழுதியுள்ளார்.

# “இடையூறு செய்யும் ஆளுநரை எதிர்க்கும் துணிவு விஜய்யிடம் உள்ளதா?” விசிக முதன்மைச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் கேள்வி



சென்னை: 'தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜய்யிடம்? என விசிக முதன்மைச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். இதைக் கண்டிக்க அஞ்சுகிறது தவெக.

இதுவே 108 எண்ணிக்கை திமுகவிடம் இருந்து, ஆளுநர் இப்படி இழுத்தடித்தால் என்ன நடந்திருக்கும்? சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் போது ஆர்.என்.ரவிக்கு நடந்தது போல் நடந்திருக்கும்.

ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜயிடம்? எனத் தெரிவித்துள்ளார்

# விஜய் விவகாரம்: ஆளுநருக்கு எதிராக தமிழக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு



சென்னை: "தனிப்பெரும் கட்சியான தவெகவை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காததை கண்டித்து (மே08) காலை 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது குறித்து காங்கிரஸ் மாவட்ட கமிட்டி தலைவர்களுக்கு அவர் எழுதிய கடிதம்: 2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குஎதிராகசெயல்படும் மத்திய பாஜக அரசை கண்டித்தும், அவர்களின் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ணா சாலை, தாராப்பூர் டவர் அருகில் காலை 11 மணியளவில் எனது தலைமையில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரி விடுதியில் அதிமுக எம்எல்ஏக்கள் முகாம் ஏன்? கட்சியின் மாநிலச் செயலாளர் அன்பழகன் விளக்கம்



புதுச்சேரி: அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரியில் முகாமிட்டிருப்பது ஏன் என்று அக்கட்சியின் புதுவை மாநிலச் செயலாளர் அன்பழகன் விளக்கமளித்துள்ளார். மேலும், மு.க. ஸ்டாலின் தோல்விக்கு எடப்பாடி பழனிசாமி மனம் வருந்தினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உள்ள தனியார் ரிசார்ட்டில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் 25 க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த ரிசார்ட்டுக்கு புதுச்சேரி அதிமுக மாநிலச்செயலாளர் அன்பழகன் எம்எல்ஏ இன்று காலை வந்தார். அப்போது அவர் கூறியதாவது: திமுக தலைவர் ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்ததற்கு எடப்பாடி பழனிசாமி வருந்தினார். அதிமுக ஒரு எஃகு கோட்டை. இதில் எந்த ஓட்டையும் இல்லை. எடப்பாடி பழனிசாமி, அதிமுக எம்எல்ஏ-க்களை கடலில் குதிக்கச் சொன்னாலும் அவர்கள் குதிப்பார்கள். எடப்பாடி பழனிசாமிதான் தலைமை பண்புள்ளவர்.

வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் எம்எல்ஏக்கள் புதுச்சேரிக்கு வந்துள்ளனர். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவின் பேரில் தான், அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரி விடுதியில் தங்கி உள்ளனர். ஓரிரு நாட்களில் எடப்பாடி பழனிசாமியும் விடுதிக்கு வருவார். இவ்வாறு தெரிவித்தார்.

# “மறுதேர்தல் நடத்துவதே சரியான தீர்வு” ஸ்ரீதர் வேம்பு யோசனை



சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்திவிட்டு, மீண்டும் தேர்தலை நடத்துவதே சரியான தீர்வாக இருக்கும் என்று ஸோஹோ நிறுவனத் தலைவர் ஸ்ரீதர் வேம்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் ஸ்ரீதர் வேம்பு கூறியுள்ளதாவது, "வாக்கு எண்ணிக்கை முடிவுகள் திருப்திகரமாக இல்லை. அமையும் அரசு பல்வேறு அழுத்தங்கள் மற்றும் இழுபறிகளால் நிலையற்றதாகவே இருக்கும். தமிழகத்திற்கு இதைவிடச் சிறந்த மாற்றங்கள் தேவை. தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்திவிட்டு, மீண்டும் தேர்தலை நடத்துவதே சரியான தீர்வாக இருக்கும். அந்தத் தேர்தலில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதை முழுமையாகத் தடுத்து, நேர்மையான முறையில் நடத்தினால் மட்டுமே உண்மையான மக்கள் தீர்ப்பு எது என்பது தெரியவரும்.

மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டால் விஜய் மிகப்பெரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவார். திமுக மற்றும் அதிமுக அதை தடுக்க விரும்பினால், அவர்கள் ஒன்றிணைந்து போராட்டும். பாஜக தனித்துப் போட்டியிட வேண்டும், அது ஒரு புதிய தொடக்கமாக அமையும்" இவ்வாறு ஸ்ரீதன் வேம்பு தெரிவித்துள்ளார்.

கடந்த மே 4-ஆம் தேதி வெளியான தேர்தல் முடிவுகளின்படி, தமிழக வெற்றி கழகம் 108 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. திமுக 59 இடங்களையும், அதிமுக 47 இடங்களையும் பிடித்துள்ளன. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவைப்படும் நிலையில், தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக கடந்த 10 ஆண்டுகளாக நீடித்து வந்த திமுக - காங்கிரஸ் கூட்டணி முறிந்துள்ளது.

# “டிஎம்சி சார்பில் போட்டியிட ரூ.5 கோடி கேட்டனர்” கிரிக்கெட் வீரர் மனோஜ் திவாரி புகார்



கொல்கத்தா: முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும் வங்காள கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்கள் (10,195 முதல் தர ரன்கள்) எடுத்தவருமான மனோஜ் திவாரி, மேற்குவங்கத்தில் மம்தா பானர்ஜி அரசில் விளையாட்டுத் துறை இணை அமைச்சராகப் பணியாற்றினார்.

மே.வங்கத்தில் சமீபத்திய சட்டப்பேரவை தேர்தலில் பாஜக மாபெரும் வெற்றி பெற்ற நிலையில் மம்தா பானர்ஜியின் 15 ஆண்டு கால பதவிக் காலம் முடிவுக்கு வந்தது.

இந் நிலையில் மனோஜ் திவாரி அளித்த பேட்டியில் கூறும்போது, 'திரிண மூல் காங்கிரஸின் (டிஎம்சி) படுதோல்வியை கண்டு நான் சற்றும் ஆச்சரியப்படவில்லை. ஒரு கட்சி முழுவதும் ஊழலில் ஈடுபட்டு எந்தத் துறையிலும் வளர்ச்சி இல்லாதபோது இவ்வாறு நடக்கத்தான் வேண்டும். சமீபத்திய தேர்தலில் பெரும் தொகையை கொடுக்க முடிந்தவர்களால் மட்டுமே திரிணமூல் காங்கிரஸிடம் டிக்கெட் வாங்க முடிந்தது. இந்த முறை 70-72 வேட்பாளர்கள் டிக்கெட் பெறுவதற்காக சுமார் ரூ.5 கோடி செலுத்தியுள்ளனர். என்னிடமும் பணம் கேட்டார்கள். ஆனால் நான் கொடுக்க மறுத்ததால் எனக்கு சீட் வழங்கப்படவில்லை' என்றார்.

# நடிகை ஸ்ரீதேவியின் சொத்துக்கு உரிமை கோரி செங்கை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிராகரிப்பு



கடந்த 37 ஆண்டுகளாக அந்த சொத்தை ஸ்ரீதேவியின் குடும்பத்தினர் அனுபவித்து வரும் நிலையில், சம்பந்த முதலியார் மகன் சந்திரசேகரனின் 2-வது மனைவியின் மகன் நடராஜன் மற்றும் மகள் சிவகாமி ஆகியோர் அந்த சொத்துக்கு உரிமை கோரியும், சொத்தில் பங்கு கேட்டும் செங்கல்பட்டு கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தொடர்ந்தனர். நிராகரிக்க கோரி ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர், அவரது மகள்கள் ஜான்வி கபூர், குஷி கபூர் ஆகியோர் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை ஏற்கெனவே விசாரித்த செங்கல்பட்டு நீதிமன்றம், முழுமையான விசாரணைக்குப் பிறகே சொத்தின் உரிமை குறித்து முடிவெடுக்க முடியும் என்று கூறி போனி கபூர் மற்றும் அவரது மகள்களின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து போனி கபூர், ஜான்வி கபூர், குஷி கபூர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அதில், அந்த சொத்தை சட்டப்படி விலைக்கு வாங்கி அனுபவித்து வரும் நிலையில் போலி வாரிசு சான்றிதழ் மூலமாக 37 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சிலர் உரிமை கோரி வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று கோரியிருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி டி.வி.தமிழ்செல்வி, ஏற்கெனவே ஸ்ரீதேவியின் குடும்பத்தாருக்கு எதிராக இந்த சொத்தில் பங்கு கேட்டு நடராஜன் மற்றும் சிவகாமி ஆகியோர் தொடர்ந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஆனால், அவர்கள் சொத்தை அபகரிக்கும் நோக்கில் செங்கல்பட்டு நீதிமன்றத்திலும் வழக்கை தொடர்ந்திருப்பது ஏற்புடையதல்ல என்று கூறி அந்த வழக்கை நிராகரித்தும், செங்கல்பட்டு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தும் உத்தரவிட்டுள்ளார்.

# கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் தவெக இளைஞர் மீது தாக்குதல்



சென்னை: தவெக இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாக இருவரை போலீசார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

சென்னை ஓட்டேரி எஸ்.எஸ்.புரம் பகுதியைச் சேர்ந்தவர் சாலமன் (26) தவெக உறுப்பினர் என கூறப்படுகிறது. இவர் தனது உறவினரை நேற்று முன்தினம், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அப்போது சாலமனின் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அதில் விஜய் நடித்த திரைப்பட பாடல் ரிங்டோனாக ஒலித்தது. அப்போது, அங்கு வந்த இருவர், சாலமனிடம், "ஏன் விஜய் பாடலை ரிங்டோனாக வைத்துள்ளாய்?" என கேட்டு தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதனால் இருதரப்புக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த போதை ஆசாமிகள் இருவரும் சாலமனை தாக்கி உள்ளனர்.

சம்பவம் குறித்து சாலமன் அளித்த புகாரின் பேரில் கீழ்ப்பாக்கம் போலீசார் நடத்திய விசாரணையில், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் (35) மற்றும் செந்தில்குமார் (40) என்பது தெரியவந்தது.

இதில், அம்பேத்கர் திமுக ஆதரவாளர் எனவும் செந்தில்குமார் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. போலீசார் இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஹிமந்த பிஸ்வா சர்மா ராஜினாமா: அசாமில் மே 12ம் தேதி புதிய அரசின் பதவியேற்பு விழா



குவாஹாட்டி: அசாம் பேரவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, மொத்தம் உள்ள 126-ல் 102 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடர்ந்து 3-வது முறையாக இக்கூட்டணி ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது.

இதனிடையே, மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா மற்றும் ஹரியானா முதல்வர் நயாப் சிங் சைனி ஆகியோர் அசாமா நிலத்துக்கான மத்தியப்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஓரிரு நாளில் பாஜகவின் மத்தியப் பார்வையாளர்கள் குவாஹாட்டிக்கு வருவார்கள் என்றும், அதன் பிறகு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ-க்கள் அடுத்த முதல்வரை தேர்ந்தெடுப்பார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஹிமந்த பிஸ்வா சர்மாவே மீண்டும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாக மாநில பாஜக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய அரசு பதவியேற்பு விழா மே 12ம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், அசாம்முதல்வர்ஹிமந்த பிஸ்வா சர்மா, ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யாவிடம் தனது ராஜினாமா கடிதத்தை நேற்று சமர்ப்பித்தார். புதிய முதல்வர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்படும் வரை தற்காலிகமாக பதவியில் தொடருமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# "தமிழக அரசியலில் குழப்பம் ஏற்படுத்த மோடி, அமித் ஷா முயற்சி" திருமாவளவன் குற்றச்சாட்டு



சென்னை: மீண்டும் மீண்டும் விஜய்யை, கைப்பாவையாக வைத்துக் கொள்ள பாஜக முயற்சிக்கிறது. ஆளுநரும் அதற்கு ஏற்றபடி, செயல்படுதுபோல தெரிகிறது. விஜய்யை பதவியேற்க அனுமதிப்பது தான் அரசியல் சட்டப்பூர்வமான கடமை என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பாஜக, அதாவது மோடி, அமித் ஷா தமிழக அரசியலுக்குள் தலையீடு செய்து குழப்பத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள். தனிப் பெரும் கட்சியாக தவெக மக்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே விஜய்யை பதவி ஏற்க ஆளுநர் அனுமதிக்க வேண்டும் என்பதுதான் அரசிலமைப்பு சட்டம் காட்டுகின்ற வழிகாட்டுதல். விஜய் ஆட்சி அமைக்க ஆதரவு கோரிய நிலையில், ஆளுநர் இன்னும் இது குறித்து எந்த முடிவையும் எடுக்காமல் குழப்பம் உருவாவதற்கு இடம் கொடுக்கிறார்; இதை ஏற்புடையதாக இல்லை. தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடியவர்கள் யார் யார் என்ற பட்டியலை ஆளுநர் கோர முடியாது. அவருக்கு மெஜாரிட்டி இருக்கிறதா என்பதை சட்டமன்றத்தில் தான் அவர் நிரூபிக்க வேண்டும். அதற்கும் அவரை அனுமதிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் காலம் தாழ்த்துவதன் மூலம் பாஜக திரைமறைவில் தலையீடு செய்து குழப்பத்தை ஏற்படுத்துறது என்கின்ற ஐயம் உருவாகிறது. இது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதல்ல. எங்களை பொறுத்தவரை மக்கள் வழங்கிய தீர்ப்புப்படி விஜய் முதல்வராக பதவி ஏற்பது தான் சரி; அதற்கு நாங்கள் ஒருபோதும் இடையூறாக இருக்க மாட்டோம்.

பாஜக அல்லது ஆர்எஸ்எஸ் போன்ற சங்கப்பரிவார் கும்பல் அவரை கட்டுப்படுத்த முயற்சித்த போது, நாங்கள் காங்கிரஸ், இடதுசாரிகளோடும் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம், ஆட்சி அமைக்க விரும்புகிறோம் என அவர் சொல்லி இருப்பதை நாங்கள் கன்சிடர் பண்ணுகிறோம்.

இதில் உள்ள நிறை, குறை; நல்லது கெட்டது மற்றும் எதிர்கால அரசியல் போக்குகளை நாங்கள் பரிசீலிப்போம் என சொல்லி இருக்கிறோம். இது குறித்து முடிவை நான் முன்கூட்டியே அறிவிக்க முடியாது.

அவர்களாகவே பாதுகாப்பு கொடுத்தார்கள்; பிறகு அவர்களாகவே பாதுகாப்பை திரும்பப் பெற்றுக் கொண்டனர். இப்போது என்ன நெருக்கடியை தர முயற்சிக்கிறார்கள்.

மீண்டும் மீண்டும் விஜய்யை, கைப்பாவையாக வைத்துக் கொள்ள பாஜக முயற்சிக்கிறது. ஆளுநரும் அதற்கு ஏற்றபடி, செயல்படுதுபோல தெரிகிறது. விஜய்யை பதவியேற்க அனுமதிப்பது தான் அரசியல் சட்டப்பூர்வமான கடமை. விஜய் கடிதம் எழுதியிருக்கிறார்; பேசினார். நாங்கள் இது குறித்து ஆலோசித்து முடிவு செய்வோம் என அறிவித்தோம்" இவ்வாறு அவர் பேசினார்.

# அக்னி 6 ஏவுகணை வரலாறு படைக்க தயார்: 10,000+ கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும்




புதுடெல்லி: பத்தாயிரம் கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி-6 ஏவுகணை வரலாறு படைக்க தயாராக உள்ளது என்று பாஜக தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் 'அக்னி-6' ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்து உள்ளது.

இந்தஏவுகணைசோதனையை நடத்த தயாராக இருப்பதாகவும், அரசின் அனுமதிக் காக காத்திருப் பதாகவும் டிஆர்டிஓ தலைவர் சமீர் வி. காமத் சமீபத்தில் கூறியிருந்தார். இந்நிலையில், பாஜக தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "அக்னி-6 - வல்லரசு பாதையை நோக்கி இந்தியா முன்னேறுகிறது. 10,000+ கிமீ தூரம் பாயும் திறன் மற்றும் எம்ஐஆர்வி தொழில்நுட்பத்துடன், அக்னி-6 வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.

இந்த ஏவுகணை இந்தியாவின் பாதுகாப்பை எதிரிகள் ஊடுருவ முடியாததாக மாற்றும். அத்துடன் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளின் வரிசையில் நம்மை நிலைநிறுத்தும். வலிமையான இந்தியா, பாதுகாப்பான இந்தியா" என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் பாஜக பதிவேற்றிய ஒரு காணொலியில் கூறியிருப்பதாவது: இது வரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சக்தியைக் கொண்டுள்ளன.

இப்போது, இந்தியா அதே வரிசையில் தனது நிலையை வலுப்படுத்தப் போகிறது. அக்னி-6 இந்தியாவின் அடுத்த தலைமுறை ஏவுகணையாகும். நீண்டதூரம்சென்றுதாக்கும் திறனுடன், இந்தியாவின் வலிமை பிராந்திய அளவில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் விரிவடையப் போகிறது. இங்குதான் அடுத்த பெரிய மாற்றம் நிகழ்கிறது. ஒரு ஏவுகணை, பல இலக்குகள் - அதுவே எம்ஐ ஆர்வி தொழில்நுட்பம்.

இது ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்யக் கூடியது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளிடம் மட்டுமே இருந்த இந்த சக்தி, இப்போது இந்தியாவுக்கும் கிடைத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. எம்ஐஆர்வி தொழில்நுட்பம் என்பது, ஒரே ஒரு ஏவுகணை மூலம் வெவ்வேறு இலக்குகளுக்குப் பல அணு ஆயுதங்களை அனுப்ப அனுமதிக்கும் ஒரு நுட்பமாகும். இது தாக்குதல் திறனை அதிகரிப்பதுடன், எதிரி நாடுகளின் ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு அமைப்புகளை முறியடிக்கவும் உதவுகிறது.

# அரசியலமைப்பு சட்டப்படி ஆளுநர் நடக்க வேண்டும் தவெக விவகாரத்தில் இ.கம்யூனிஸ்ட் கருத்து



சென்னை: அரசியலமைப்புசட்டத்தைமதித்து ஆளுநர் செயல்பட வேண்டும் என்றும், பதவி ஏற்புக்கு முன்பு தவெக, தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என ஆளுநர் நிர்பந்திப்பது ஏற்புடையதல்ல என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் 23 ஆம் தேதி நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சிஅமைக்கும்வகையில், தெளிவான தீர்ப்பை வழங்கவில்லை.

எனினும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு 108 உறுப்பினர்களை வழங்கி, அதனை தனிப் பெரும் முதன்மை எண்ணிக்கை கொண்ட கட்சியாக தேர்வு செய்துள்ளனர்.

இதன் அடிப்படையில் தவெக தலைவர் சி. ஜோசப்விஜய், ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்கும் உரிமை கோரியுள்ளார். பதவி ஏற்புக்கு முன்பு தவெக, தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என ஆளுநர் நிர்பந்திப்பது ஏற்புடையதல்ல.

தனிப் பெரும் எண்ணிக்கை கொண்ட தவெக, தனது பெரும்பான்மையை பேரவையில் நிரூபிக்க ஆளுநர், அரசியலமைப்பு சட்டப்படி அவகாசம் தரவேண்டும். இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடந்த எஸ்.ஆர். பொம்மை வழக்கு உட்பட பல வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

இவைகளை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஆளுநர், தவெக தனது பெரும்பான்மையை பேரவையில் நிரூபிக்க வாய்ப்பளித்து அரசியலமைப்பு சட்டம் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின் உணர்வை மதித்து நடக்கவேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஆளுநரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என தெரிவித்துள்ளார்.

# 'We don't count body bags': Air Marshal Bharti, Col. Qureshi a year later, faces of Op Sindoor still hit hard



*Details of Op Sindoor were disclosed amid combat in May last year routinely by Indian officers, whose hard-hitting statements still probably still haunt Pak.*

*It was this day last year when Indian armed forces woke the nation up to their update of avenging the April 22 Pahalgam terrorist attack by striking terror infrastructure in Pakistan and PoK under Operation Sindoor – an exercise which sparked curiosity for details that were later presented to the world by some military officials who went on to become the faces of the action.*

*The details of Operation Sindoor's progress were brought to the public through press briefings that were routinely held by three women officers – Colonel Sofiya Qureshi (Army), Wing Commander Vyomika Singh (Indian Air Force), and Commander Prerna Deosthalee (Navy) – earning recognition as trailblazing Indian Armed Forces personnel who became prominent faces of the 2025 retaliatory strike against terror camps.*

*Routine press briefings on Operation Sindoor were also held by the then DGMO Lt Gen Rajiv Ghai, DG Air Operations, Air Marshal AK Bharti and Vice Admiral AN Pramod, DG Navy Operations – who gained popularity for their no-holds barred responses to media queries amid combat.*

*"Our aim was not to inflict casualties, but in case there have been, it is for them to count. Our job is to hit the target, not to count the body bags," Air Marshal Bharti had said during one such briefing on Operation Sindoor when asked about losses.*

*While these officers took the podium to update the public on the Operation Sindoor during which several terror sites in Pakistan and Pakistan-occupied Kashmir were neutralised, the success of the military exercise is attributed to a combined effort of the three forces and the valour of many armed force personnel.*

*Colonel Qureshi in 2016 was the first woman officer to lead a contingent of the Indian Army in a multinational military exercise. At 'Exercise Force 18', a mega-military drill involving ASEAN-Plus countries, she led a 40-member contingent focused on Humanitarian Mine Action (HMA).*

*Born in 1974 to a military family in Gujarat's Vadodara, Col Qureshi graduated with a master's in Biochemistry from Maharaja Sayajirao University in 1997. Her grandfather was a religious teacher in the army, a statement issued by the state government last year noted.*



ஈரோடு மாவட்டம் பவானி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள முருகர் கோவிலில் வியாழக்கிழமை முன்னிட்டு குருபகவானுக்கு காலை வாசனை திரவியங்களால் அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. தொடர்ந்து தீபாராத நினைவுற்ற பிறகு பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. பக்தர்கள் குரு பகவானை பயபக்தியுடன் வணங்கி அருள் பெற்றுச் சென்றனர். நேற்று மஞ்சள் வஸ்திரத்தில் காட்சியளித்தார்.



ஈரோடு மாநகர் ரயில்வே காலனி சாய்பாபா கோவிலில் வியாழக்கிழமைமுன்னிட்டுநேற்றுகாலைசாய்பாபாவிற்கு கற்பூர ஆரத்தி நடைபெற்றது. தொடர்ந்து வண்ண பூக்களினால் அலங்காரம் நடைபெற்று அர்ச்சனைகள் நடைபெற்றது .அதனை தொடர்ந்து தீபாராதனை நிறைவுற்ற பிறகு பக்தர்கள் அனைவருக்கும் மிகச் சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது.இந்த நிகழ்வில்பக்தர்கள்பயபக்தியுடன்சாய்பாபாவை வணங்கி அருள் பெற்றுச் சென்றனர்.

# பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தில் இணையுமாறு தமிழகத்துக்கு மத்திய அரசு மீண்டும் கடிதம்



சென்னை: பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தில் இணையுமாறு தமிழகத்துக்கு மத்திய அரசு மீண்டும் கெடு விதித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கையில் பிஎம்ஸ்ரீ பள்ளித்திட்டம் இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த திட்டத்தில் மும்மொழிக் கொள்கை இருப்பதால் தமிழகம் இணைய மறுத்துவிட்டது. இதன் காரணமாக, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம் மூலமாக தமிழகத்துக்கு தரவேண்டிய சுமார் ரூ.3,500 கோடியை வழங்காமல் மத்திய அரசு நிறுத்தி வைத்தது. இந்தவிவகாரம் கடந்த திமுக ஆட்சியில் பெரும் சர்ச்சையானது. மத்திய கல்வி அமைச்சகம் தமிழக அரசுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில், பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தின்கீழ் பள்ளிகளை மேம்படுத்த உடனடியாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கெடு விதித்துள்ளதாக கூறப்படுகிறது. தவெக தலைமையில் புதிய அரசு அமைய உள்ள சூழலில் மத்திய அரசு இந்த கடிதத்தை அனுப்பியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் தவெக என்ன முடிவெடுக்கும், முந்தைய திமுக அரசுபோல எதிர்ப்புதெரிவிக்குமா அல்லது ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமா, நிறுத்தி வைக்கப்பட்ட கல்விக்கான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கும் என பல கேள்விகள் எழுந்துள்ளன. இதற்கிடையே, பள்ளிக்கல்வித் துறையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நலத்திட்டங்கள், அதனால் பயன் பெற்றவர்கள், தேவையற்ற செயல்பாடுகள் தொடர்பான முழு விவரங்களை அறிக்கையாகத் தருமாறு, விரைவில் ஆட்சி அமைக்க உள்ள தவெக கேட்டுள்ளதாக துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.